# உயிர் வலித்த கணம்



வன்னியூர் செந்தூரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர் வலித்த கணம்

செந்தணல் வெளியீடு

வன்னியூர் செந்தூரன்
கிழக்குப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர் - உயிர் வலித்த கணம்

நூலின் வகை - கவிதை

ஆசிரியர் - வன்னியூர் செந்தூரன்

தொடர்பு முகவரி -
Email : vanniyoorsenthuran@gmail.com
Facebook: Sunthar Senthuran
வன்னியூர் செந்தூரன்
கவிஞர் வன்னியூர் செந்தூரன்
தொ.பே.இல- 0775484651
0779717662

தபால் முகவரி: வன்னியூர் செந்தூரன்,
கற்சிலைமடு,
ஒட்டுசுட்டான்,
முல்லைத்தீவு.

பதிப்புரிமை - ஆசிரியர்க்கு

பதிப்பு - சித்திரை 2014

பதிப்பகம் - சுப்பிரின் அச்சகம்
இல:134, 2ம் குறுக்குதெரு,
சூசைபிள்ளையார்குளம்,
வவுனியா.

அட்டைப்படம் - க.ஜனார்த்தன்

ஓவியம் - ப.நிசாந்தினி

விலை - 240 ரூபா

ISBN - 978-955-41197-0-3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

உளமும் உடலும் ஒன்று சேர்ந்து வலியும் வலிமையும் பெறுகின்றன

பொதுவாக கவிதை வழவங்கள் செய்யுள், கவிதை, புதுக்கவிதை, பின் நவீனத்துவக் கவிதைகள் என்று வகைப்படுத்திக் கொள்கின்றனர் இன்றைய நவீன இலக்கிய வல்லுநர்கள்.

எப்பழயிருந்த போதும் கவிதைகள் மொழிகளால் திரட்சியுறும் போது அவை வாசகர் நெஞ்சங்களில் ஒரு மிளிர்ச்சியைத் தோற்றுவிக்க வேண்டும். அந்த மிளிர்ச்சியானது உளம் சார்ந்து ஆய்வு செய்யப்படும் ஒன்றாகவே இருந்து விடப் போகின்றது.

அதாவது, குறித்த கவிதைகளை வாசிக்கின்றபோது உள்ளத்திலே தொடங்குகின்ற மிளிர்ச்சி அதை வாசித்து முழக்கின்ற போதும் ஒரு சிலிர்ப்பு அல்லது சிரிப்பு அல்லது வியப்பு அல்லது நெஞ்சை நெருட்டும் விம்மல் அல்லது ஒரு கேள்வி என்று பலவித அருட்டுணர்வுகளைத் தோற்றுவித்தாக வேண்டும். இதில் ஏதோ ஒன்று சம்பவிக்கவில்லை எனின் நாம் வாசித்தது ஒரு சம்பவத்திற்கான கட்டுரைப் பந்தி அமைப்பாகவே இருக்க வேண்டும்.

மேலும், புரியாத புதிர்கள் என்ற வகையிலும் பல கவிதைகள் இன்று வெளிவராமலும் இல்லை. 'நான் கவிதை எழுதுகிறேன் விரும்பினால் யாராவது இதன் பொருளைக் கண்டு பிழயுங்கள்?' என்று சவால் விடுவது போலவே அந்தக் கவிதைகள் இருந்து விடுகின்றன.

முல்லைத்தீவு மண் அரிய பல இலக்கிய ஜாம்பவான்களைத் தந்த இலக்கியப் பொழில் பூமி. அப்பழயான வீர மண்ணிலிருந்து இன்று இளைய கவிஞர்கள் பலரும் முகிழ்ந்து எழுந்து வருகிறார்கள். அவர்களுள் ஒருவராகவே வன்னியூர் செந்தூரனும் திகழ்ந்து கொண்டிருக்கின்றார்.

ஏலவே 'நிலவைத் தேடும் வானம்' என்றொரு கவிதை நூலினை வெளியிட்டிருக்கிறார். அந்நூலுக்கான 'காவியப் பிரதீபா' விருதினையினையும் பெற்றிருக்கிறார். இதனால் ஈழத்துக் கவிஞர்களில் ஒருவராகத் தன்னை அடையாளப்படுத்தியிருக்கிறார், வன்னியூர் செந்தூரன்.

உயிர் வலித்த கணம்' எனும் கவிதை நூல் அவரின் இன்னொரு இலக்கிய பிரசவமாகும். போர் சார்ந்த பாடுபொருளோடு கவிதைகள் பிரவாகித்திருக்கின்றன.

வன்னியின் வீர அடையாளம் பண்டார வன்னியன் பற்றிய வீரத் தளம்புகள் தொகுதியின் முதல் கவிதையாக இடம் பிழத்திருக்கிறது.

*'அடங்காச் செம்பூமி*
*வணங்கா குலம் வாழ்*
*சிரம் தாழா தமிழ்*
*சிம்மாசனக் கோவே..!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*குலத்து வீரம்*
*களத்தில் தெறிக்க*
*சிவந்த குருதி*
*விதையை விதைக்க*
*வெற்றித் தளம்பு*
*நெஞ்சில் சிரிக்க*
*வீரத் திலகம்*
*நுதலை மறைக்க..'* என்று நீண்டு விரிந்து செல்லும் கவிதையில்

*'பொன்நிலம் காத்து நின்ற*
*தன்னலமில்லா வீரனே*
*திண்ணமானவன் எண்ணமிங்கு*
*திடமான வரலாறடா..!'*

என்று ஒரு குறியீடாக சொல்வதாகவும் நினைக்கலாம். பண்டார வன்னியன் யார்? அவன் வீரம் என்ன? பண்டார வன்னியனின் அடையாளம் இறுதியாக எப்படி இருந்தது என்று சொன்னால்தான் புரியுமென்றால், நான் என்ன செய்ய முடியும்...?

மனித வாழ்வியல் ஓட்டத்தில் ஒவ்வொரு காரியத்திற்கும் காரணமான சாட்சி ஒன்று இருக்கும். அவற்றையெல்லாம் கவிதை மொழிகளில் பட்டியலிடும் செந்தூரன் அதன் முடிவிலே

*'யுத்தத்தின் சாட்சி*
*உக்கிப்போன எலும்புகள்*
*மக்கிப்போன உடலணுக்கள்*
*உயிர் குடித்த உலோகங்களின்*
*சமதியில் சாபத்துடன்...!'* என்று அந்தக் கவிதை நிறைவுறும்.

நம் ஈழ தேசமதை சம்பந்தர் பாடி வைத்தார் தேவாரமாக..!அது இன்று எவ்வளவு யதார்த்தமாகியிருக்கிறது பார்த்தீர்களா..? என்பதைச் சான்று பகிர்வதாகவே 'யாரது நடு நிசியில்?' என்றொரு கவிதை நோக்கப்படுகிறது.

*என் வீடு போக வேண்டும்*
*ஏன் எனைத் தடுக்கிறாய்..?*
*மண்ணுடன் சண்டையிடும்*
*எலும்புக்கூடுகளின் அணி*
*புதைந்தபடி ஏங்குவது*
*புத்திக்குக் கேட்கலையோ..?*

என்ற கவிதையில் 'புத்தி' என்பது அறிவியல் தேசத்திற்கான குறியீடாக நாம் நோக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஏனம்மா சோகம்..?' என்ற கவிதையிலே அந்த நாள் ஞாபகங்களை மீட்கிற வேளை அவர் நெஞ்சத்திலே ஆறாத வலி நெருடி முட்டித் தெறிகிறது.

***'கிளையிழந்த மரங்களாய்***
***நிலையிழந்த குடும்பங்கள்***
***தலையிழந்த உடல்கள்***
***இரத்த மையினால்...***

...................
...................
...................

***பூமரங்கள் விதவையானது***
***பூசைக்கும் பூவில்லை***
***சவப்பெட்டிகள் சிரித்தன***
***சந்தியெல்லாம் தோரணங்கள்...'*** என்று ஆதங்கமாகிறார்.

'முதிர் கன்னியின் ஏக்கம்' என்ற கவிதையிலே கன்னிப் பெண் ஒருத்தி நீண்ட காலங்களாகவே கல்யாணத்திற்காக ஏங்கிக் காத்திருக்கிறாள். முதிர் கன்னி என்ற பெயரோடு வாழுகிறாள். அவளோடு பழத்த தோழிகளின் பிள்ளைகளும் வயதுக்கு வந்து விட்டார்கள். இவள் இன்னும் கன்னியாகவே வாழ்கிறாள்.

***'தேநீர் கோப்பைகளில்***
***பதிந்த உதடுகள்***
***அத்தனையும் சொன்னது***
***பிழத்திருக்கிறது என்று***
***அவளையல்ல தேநீரை....'*** என்று ஒரு ஏமாற்றத்தோடு கவிதை முடிகிறது.

கவிதைகளின் அழகியலை ரசிக்கின்றபோது அதில் லயித்து விடவே மனம் அவாப்படுகிறது. 'வடலி சொன்ன வாக்கு' என்ற கவிதையிலே

***'பச்சை வயலோரம்***
***பசும் பனங்காடு***
***பற்பல காலமாய்***
***அப்பனைமரத்திலே***
***பச்சைக்கிளிகளின்***
***சொர்க்க வாழ்வு'*** என்று சொல்லி முடிக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி உதாரணத்திற்கு சில கவிதைகளை மட்டுமே நான் எடுத்துக் காட்டியிருக்கிறேன். மேலும், 'ஒரு சில நிலவுகளுக்கு மட்டும்..', 'மறைந்ததோ மனிதம்..?', 'பாவி மனைவிக்காய் ஆவி எழுதும் ஒரு மடல்...', 'கவனி ஆடவனே..!', 'மீண்டும் அழியா நினைவுகளுடன்..!', 'சந்தனக் கடத்தல் வீரப்பன்', என்று அத்தனை கவிதைகளும் உண்மையானவை. வாழ்வியலோடு ஒத்துப் போகின்ற தன்மையினையும் கூறலாம்.

இலக்கியக்காரன் என்பவன் ஒரு சமூகப் பிராணி! அவன் தான் வாழும் சமூகம் மட்டுமல்லாமல் அந்தச் சூழலுக்கு அப்பாலும் சென்று ஆய்வுகளை செய்யக் கூடியவன். அதற்காக அவன் நிறைய வாசிப்புப் பழக்கத்திற்கு உள்ளாகிறான். ஒருவனுக்கு அதிக தேடல் வேண்டும். அந்தத் தேடலுக்குள்ளும் சமூக விழுமியங்களை வடித்தெடுத்து தன் உரை நடை சார்ந்து நாவலாகவோ, சிறுகதையாகவோ, கவிதையாகவோ தந்து விடுவதில் எழுத்தாளர்கள் தனித்திறமை பெற்றவர்களாக மிளிர்ந்து விடுகிறார்கள். அப்படியான நல்ல எழுத்துக்களை வாசகன் பருகி மகிழ்கிறான். பருகிறபோது அவன் உளத்திற்கும் உடலுக்கும் ஓர் உற்சாகம் கிடைக்கிறது. இதனால் சமூகத்தைச் சிந்திக்க வைப்பதில் இலக்கியக்காரன் வெற்றி பெற்று விடுகிறான்.

ஆகவேதான், ஒரு கவிஞன் படைக்கிற கவிதைகள் மொழி இறுக்கத்தோடும், வாசகர்களுக்குப் புரிதலோடும் படையலாகிறபோது வாசகனும் அதை விரும்பிப் படிக்கத் தொடங்குகிறான். தான் படிப்பது மட்டுமில்லாமல் மற்றவர்களையும் படிக்கச் சொல்லித் தூண்டுகிறான். இதுவே கவிஞனின் மாபெரும் வெற்றி ஆகும். இவ்வாறான பரந்தளவான வெற்றியினை வன்னியூர் செந்தூரனும் சிறப்பாகப் பெற்றிருக்கிறார் என்றே நான் சொல்லுவேன்.

உண்மையிலே 'உயிர் வலித்த கணம்' என்ற கவிதைத் தொகுதியைப் படித்து முடித்த வேளை என் நெஞ்சமும் கனத்தது, அவை வலிகளையும் தந்தன.

இளவயதுக் கவிஞனான செந்தூரன் முல்லை மண்ணில் விழுந்திருக்கிற எதிர்காலத்தின் ஓர் இலக்கிய முத்து என்று உரக்கச் சொல்லலாம்.

வன்னியூர் செந்தூரனைப் பாரட்டி வாழ்த்தி மகிழ்கிறேன்.

அன்புடன்
கவிஞர் – சமரபாகு சீனா உதயகுமார்,
வல்வெட்டித்துறை
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் (கிளிநொச்சி மத்திய கல்லூரி) எமது மாவட்டத்தின் தாய்ப் பாடசாலையாக திகழ்ந்து வருகின்றது. எமது மண்ணில் அறிவாளிகளை உருவாக்கி ஆற்றல் மிக்க சமூகத்தை கட்டியெழுப்பும் எமது பாடசாலையின் மாணவர்கள் நெருக்கடியான கால கட்டத்திலும் பல துறைகளிலும் சாதனையைச் செய்தவர்கள் / செய்து வருபவர்கள். தீவிரம் தணியாத குதிரைகளாக பயணிப்பவர்கள். எமது பாடசாலையின் பழைய மாணவர்கள் உலகறிந்த கலைஞர்களாக மிளிர்வதை அறியாதவர்கள் இல்லை.

வன்னியூர் செந்தூரன் எமது பாடசாலையின் பழைய மாணவன். கலை இலக்கியங்களில் இயல்பான ஈடுபாடுகொண்டவர். "கவிதை" என்ற உயர்ந்த கலை வடிவத்தை எட்டித்தொடுவதற்கு இவரது கவிதைகள் பயணமாவதாக உணர்கிறேன். இவர் கடந்த வருடம் "காவியப் பிரதீபா" எனும் சிறந்த கவிஞருக்கான விருதை வென்றவர். இன்றைய கவிதை நிலை வித்தியாசமானது. வாழ்க்கைக்கு அப்பாற்பட்ட உணரவேண்டிய, தொட வேண்டிய, உணர்த்த வேண்டிய தேவைகள் கவிதைக்கு இருக்கின்றன. அந்த உணர்வு மட்டத்தை எட்டுவதற்கான ஓர் அமைப்பு முறையினையே இன்றைய கவிதைகள் வேண்டி நிற்கின்றன என்பதே ஈழத்து கவிதைகளின் தேவையாகின்றது.

கலைஞன் ஒருவனின் பிரக்ஞை என்பது ஒரு சமூகத்தேடலாக உருவாக வேண்டும். உண்மையினை உரைத்தலும், உண்மையில்லாததை உரைத்தலும் உணர்வு நிலைகளை தட்டியெழுப்ப வேண்டும். உள்ளக்கிளர்ச்சியினை ஏற்படுத்தி பெருவெளியினை காண்பிப்பது கவிதைக்கு முக்கியமானது. இத்தகையதொரு "உணர்ச்சி வெடிப்பு" கவிதையின் உள்ளார்த்தமாக விளங்கி வன்னியூர் செந்தூரனின் கவிதைகளிலும் சஞ்சரிப்பதனைக் காணமுடிகிறது.

வன்னி மன்னன் பண்டார வன்னியன் தொடக்கம் – என்னவளே வரைக்கும் பலவகையான கருத்துருவாக்கம் கொண்ட கவிதைகள் காணப்படுகின்றன. கவர்ச்சியும் உணர்ச்சி பாவத்திற்கு அழுத்தம் கொடுத்தும் கவிதைகள் நெகிழ்ந்து செல்வதனைக் காணலாம்.

**பூ மரங்கள் விதவையானது**
**பூசைக்கும் பூவில்லை**
**சவப்பெட்டிகள் சிரித்தன**
**சந்தியெல்லாம் தோரணங்கள்**

என்பதில் செந்தூரன் எதைச் சொல்கிறார் என்பது எல்லோருக்கும் தெரியும். இதுதான் கவிதையின் உயிர் பிரவாகம்.

எமது பாடசாலையின் பழைய மாணவன் இத்தகைய "உயிர் வலித்த கணம்" எனும் கவிதை நூலை வெளியிடுவதனையிட்டு பாராட்டுவதோடு அவரது எழுத்துக்கள் மேலும் வலிமை பெற கல்லூரி மாதாவினை பணிந்து வேண்டுகின்றேன்.

திரு.மு.இரவீந்திரன் (அதிபர்)
தலைவர்,
பழைய மாணவர் சங்கம்.
கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்
(கிளிநொச்சி மத்திய கல்லூரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட நட முன்னேறு நடை தளர்வின்றி...

வன்னியூர் செந்தூரன் சமகால இளையவர்களுள் சற்று வித்தியாசமாக வெளித்தெரிகிறான். தன்னையும் , தனது சமூகத்தையும் உணர்ந்து கொண்டவன் இவன். உணர்வுகளிற்கு உயிர் கொடுக்கின்றான் ஒவ்வொரு அனுபவங்களும் உணர்வுகளுடன் பேசுகின்றன. அதற்கு கையாண்ட வடிவம் கவிதை. கவிதை மொழி பன்னெடுங்காலத் தொன்மையானது எனினும் இன்றும் அது வாழ்ந்து தன் செழுமை குன்றாது சிறப்பாய் நடைபோடுகின்றது.

சொல்லவந்ததை சொல்பவன் சொல்ல, மற்றவர் அதனைப் புரிந்து கொண்டால் அவ்வரிகளால் வாசகர்களுக்கு உணர்வினை ஊட்ட முடிந்தால் அது கவிதை. காலத்தின் கண்ணாடி இலக்கியமென்றனர். கவிதை விம்பத்தை மட்டும் காட்டாது அதற்கு உயிரும் கொடுத்து நிற்கிறதே.

செந்தூரன் முல்லை மண்ணில் பண்டாரவன்னியனின் நினைவுக் கற்சிலை அமைந்துள்ளமையால் கற்சிலைமடு எனும் காரணப் பெயர் கொண்ட ஊரில் பிறந்து எமது பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்றவன். உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் கற்று இன்று கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தன் உயர் பட்டப்படிப்பைத் தொடர்கிறான். "நிலவைத் தேடும் வானம்" என்ற கவிதை நூலினூடு அறிமுகமாகி வன்னியூர் செந்தூரனாக தனக்கு முகவரியிட்டுக் கொண்டான். 2013 இல் இவனது கன்னிப்படைப்பிற்கு "காவியப் பிரதீபா" எனும் சிறந்த விருது கிடைத்தது. இவனது இரண்டாவது நூல் தான் "உயிர் வலித்த கணம்".

வன்னியில் வாழ்ந்து போரில் மீண்ட மாந்தர் ஒவ்வொருவருக்கும் உயிரின் பெறுமதி நன்கு தெரிந்திருக்கும். அதிலும் உயிர் வலித்த கணங்கள் எத்தனையோ...??? கணக்கிட முடியாத, எழுதப்படாத கணங்களுள் ஒரு கணத்தை தன் பேனா முனைகளால் எம்மிடம் தருகிறான் செந்தூரன்

வேர்களில் பாய்ச்சப்பட்ட வேல்களால் விருட்சம் இலை கொட்டிப்போக, நிழலின்றி நாணல்கள் துவண்டு நிற்கின்ற போதும் வேரிலிருந்து வழியும் ஈரத்தால் நாணல் சருகாகாது உயிர் வாழ்கிறது. வேல்கள் வேர்களில், அதனால் வேதனையும் வலியும் வேர்களுக்கு மட்டுமே. வேல்களைப் பாய்ச்சியோர் யாராகிலும் விருட்சம் மொட்டையாகிப் போனபோது அவர்கள் வலியை அறிந்திருக்கவேயில்லை. மொட்டையாய் போனது விருட்சங்கள் மட்டுமல்ல... ஆக கவிஞர்கள் வலிகளை வரிகளால் வார்த்திருக்கிறார்கள். சமகாலக் கவிஞர்களின் இவ்வரவுகள் இன்று புதிய படைப்புக்கள், இவை நாளை வரலாற்று ஆவணங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தூரனின் கவிதைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவரையும் பேச வைக்கும். "வோல்ட்டேயர்" கூறினார் எழுதுகோல் சமன் செய்து சீர் தூக்கும் கோல். அதனால் உலகையே மாற்றுவேன்று. அதுபோல எழுத்தாணி கொண்டு கவிதைப்பயணத்தில் புகுந்துள்ள வன்னியூர் செந்தூரனின் பயணம் சிகரத்தைத் தொட வேண்டும். கல்லும், முள்ளும், காட்டு மிருகங்களும், புயலும், சூறாவளியும், இடியும், மின்னலும், மழையும், எரிமலையும் வழி நெடுக வரினும் நட நட முன்னேறு நடை தளர்வின்றி. அதற்கு என்றும் தான்தோன்றி ஈஸ்வரர் உன்னுடன் இருக்க வேண்டி வாழ்த்தி விடை பெறுகின்றேன்.

திரு.சி.நாகேந்திரராஜா
(இலக்கிய விமர்சகர்)
அதிபர்
மு/கற்சிலைமடு அ.த.க. பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

சுந்தர மூர்த்தி செந்தூரன் என்ற இயற் பெயரைக்கொண்ட வன்னியூர் செந்தூரனின் இரண்டாவது தொகுப்பாக மலர்ந்திருக்கிறது உயிர் வலித்த கணம் என்ற கவிதைத்தொகுதி. கிழக்கு பல்கலைக்கழக மாணவனான இவர் நிலவைத் தேடும் வானம் என்ற கவிதைத் தொகுதியை 2013 இல் வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இவரது அநேகமான கவிதைகள் யுத்த கால நிலவரங்களை எடுத்தியம்புகின்றன. இவரின் கவிதைகள் சமூகப்பாங்கான கருத்துக்களைச் சொல்கின்றன. பரவலாக நோக்குமிடத்து கடந்து வந்த கற்பாதைகள் இவர் கவிதைகளுக்கு கருவாயிருக்கின்றன. பட்ட அடிகள் அடித்தளமிடுகின்றன.

யாரது நடுநிசியில் என்ற கவிதை மர்ம உலகத்துள் அழைத்துச் செல்வது போன உணர்வை உருவாக்கிவிடுகின்றது. அவர் கவிதையை கையாண்டுள்ள விதம் வியப்பு தருகின்றது.

காலம் தந்த சந்தோஷங்களும், காலத்தால் தரப்பட்ட காயங்களும் சிலரை வீச்சான கவிஞர்களாக மாற்றியிருந்தாலும், அடிப்படையில் இரசனை உள்ள அனைவருமே கவிஞர்கள் தான். தாம் பார்த்து கேட்டு ரசித்தவற்றை தம் உணர்வுகள் வழியாக, கவிதைகளினூடாக சொல்லி முடிக்கும் திறனில்தான் கவிஞன் முழுமையடைகின்றான்.

அந்த வகையில் வன்னியூர் செந்தூரன், சமூகத்தின் இருப்பு நிலை குறித்த கவிதைகளையும், இறந்த கால நினைவுகளையும் தத்ரூபமாக சொல்லி வாசகர் மனதை கவர்ந்து விடுகின்றார். எதிர்காலத்தில் கவிதைத் துறையில் மட்டுமல்லாது சிறுகதை, நாவல், சிறுவர் பாடல், சிறுவர் கதைகள் யாவற்றிலும் அக்கறை செலுத்தி பல்துறைப் படைப்பாளியாக மிளிர வேண்டும் என்று வினயமாக வேண்டிக்கொள்கின்றேன். இவரது இலக்கியப்பணி சிறப்புப் பெற முழுமனதுடன் இவரை வாழ்த்துகின்றேன்!!!

கவிதாயினி - ரிம்ஸா முஹம்மத்
பிரதம ஆசிரியர்
பூங்காவனம் சஞ்சிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

அவலம் சுமந்த மண்ணில் தினம் அழுகின்ற, துயரம் சுமக்கின்ற கனமான மனக்கவலைகளோடு வாழுகின்ற எம்மவர்க்கு என் கவிகள் ஓர் திடமூட்டி வலுச்சேர்க்கும் என நம்புகிறேன். கலைகளின் அரசியான கவிதையை கற்பனையின் ஊற்றில் வழிவெடுப்பன என சிலர் சொல்லுவார்கள். ஆனால் அவற்றையும் தாண்டி வாழ்க்கை சொல்லுகின்ற பாடங்கள், வலிகள் கற்றுத்தருகின்ற அனுபவங்கள் ஆனது சமூகத்திற்கு பயனுள்ள சிறந்த கவிப் படைப்பாளிகளை உருவாக்கும் என்பதும் என் கருத்து. மரணத்தின் வலியை உணர்ந்தவனாலேயே அதன் நிலைபற்றி பேச முடியும். எதிர்கால சந்ததிக்கும் ஏதோவோர் நல்ல கருத்துக்களைச் சொல்ல முடியும். உண்மையிலேயே அந்த இரத்தக் கறை படிந்த தொலையாத நினைவுகள் மறையாத கறையாகி இன்றும் மனதை அரித்துக் கொண்டுதான் இருக்கிறது. இவற்றை இலக்கியப் பதிவாக்கும் போது ஓரளவாவது மனச்சுமை குறையும் என நம்புகிறேன். இத்தொகுப்பு வெளிவர என்னோடு நின்று ஒத்தாசை வழங்கிய நண்பர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் எனது உளம் நிறைந்த நன்றிகள்.

"விலைகள் கேட்காதே
கலையை வளரவிடு
தலைகள் கொடுத்தேனும்
தமிழை வாழவை"

*என்றும் அன்புடன் ...*
*வன்னியூர் செந்தூரன்*

தொடர்புகளுக்கு-தொ.பே.இல : 077-5484651
077-9717662
முகப்புத்தகம் : வன்னியூர் செந்தூரன்
கவிஞர் வன்னியூர் செந்தூரன்
Sunthar Senthuran



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...


| | | |
|---|---|---|
| 01. | வன்னி மன்னன் பண்டாரவன்னியன் | 13 |
| 02. | சாட்சி | 16 |
| 03. | யாரது நடுநிசியில் | 18 |
| 04. | கவியின் ஆசை | 19 |
| 05. | அழியா நிமிடங்கள் | 21 |
| 06. | அவனின் மனமும் பேசுது | 23 |
| 07. | கலைந்த கனவு | 25 |
| 08. | இப்படியும் இன்று | 26 |
| 09. | எல்லாம் ஏமாற்றம் | 28 |
| 10. | ஏனம்மா சோகம் | 29 |
| 11. | புதுமையோ பதுமையோ | 32 |
| 12. | துரோக நிலவு | 33 |
| 13. | அணையாத தீபம் | 35 |
| 14. | மரணவேளை மனநிலை | 37 |
| 15. | முதிர் கன்னியின் ஏக்கம் | 40 |
| 16. | என் வழிகாட்டி | 42 |
| 17. | வடலி சொன்ன வாக்கு | 44 |
| 18. | ஒருசில நிலவுகளுக்கு மட்டும் | 45 |
| 19. | மறைந்ததோ மனிதம் | 47 |
| 20. | பாவி மனைவிக்காய் ஆவியெழுதும் ஓர் மடல் | 50 |
| 21. | உயிர்க் கூடு ஒரு கனவுக் கூடு | 52 |
| 22. | கவனி ஆடவனே | 53 |
| 23. | சந்தணக்கடத்தல் வீரப்பன் | 54 |
| 24. | மீண்டும் அழியா நினைவுகளுடன் | 55 |
| 25. | உள்ளங்கை தத்துவம் | 58 |
| 26. | மறப்பானா வாழ்வில் | 59 |
| 27. | தமிழ்வாழும் ஒரு கிராமம் | 62 |
| 28. | ஒருத்தியின் பதறல் | 64 |
| 29. | என்னவளே | 66 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி மன்னன் பண்டாரவன்னியன்

செழிப்பு கானகதேசம்
செல்வஞ்சீர் மக்கள்வாழ்
வந்தாரை வாழவைக்கும்
வன்னித் தாய்ப்பூமி....

அடங்காச் செம்பூமி
வணங்கா குலம்வாழ்
சிரம்தாழா தமிழ்
சிம்மாசனக் கோவே ...

குலத்து வீரம்
களத்தில் தெறிக்க
சிவந்த குருதி
விதைய விதைக்க
வெற்றித் தளிம்பு
நெஞ்சில் சிரிக்க
வீரத் திலகம்
நுதலைமறைக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையின் வீரம்
மலையை உடைக்க
காலின் வேகம்
தரையை பிளக்க
போரின் ஒலிகள்
இடியை மறைக்க
வாளின் வீச்சில்
மின்னல் பறக்க
வீரம் சிந்தும்
சேனை கொண்ட
வன்னியனே....

வில்மீசை வேலும்
விழிஈட்டி வாளும்
விரட்ட மடிந்தன
விசப்பகைச்செடிகள்

குலசேகரம் வைரமுத்து
குலத்தின் வம்சம் நீ ..
குருவிச்சை நாச்சியுள்
குடிகொள் நாயகன் நீ ..

கற்சிலைமடுவில் கல்வெட்டு
பொற்சிலையாய் உன் வீரம்
காதலியார் சம்மளங்குளத்தில்
காலடிகள் அழியவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பூரப் புல்வெளியில் களமாடி
கழுத்தறுத்த வெள்ளைத்தலைகள்
நற்கரத்தில் தமிழ்த்தர்ம
புனிதப்போர் நீ தொடுத்து

பெண்ணியத்தின் வீரம்காட்ட
கண்களிலே அனல்தெறிக்க
கலந்தாள் களத்திலே
கணையுடன் உன்தங்கை

எத்தனை தேவர்கள்
வந்துதித்தார் எம்மண்ணில்
மறைந்தாலும் மறையவில்லை
அவர்புகழும் உன்போல ..

பொன்நிலம் காத்து நின்ற
தன்னலமில்லா வீரனே
திண்ணமானவுன் எண்ணமிங்கு
திடமான வரலாறடா ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாட்சி

வீரச்சாட்சி
வாளின் விளிம்பில்
வழியும் இரத்தம்

காதற்சாட்சி
விழியோரம்
கசியும் ஊற்று

பெண்மை சாட்சி
மாதம் ஒழுங்கு
மலரும் விலக்கு
தரிக்கும் தாய்மை

கற்புச் சாட்சி
கட்டில் மேல்
கசங்கும் சேலை
காணும் யோகம்

கடவுள் சாட்சி
கையுயர்த்தும்
தெருப்பிச்சையின்
வதனச்சிரிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்மச் சாட்சி
ஏழை எளியவர்
கண்ணீர் கிழித்த
சாதமிடும் கெட்டவன்

கல்வியின் சாட்சி
கிழிந்த புத்தகப்பை
குருவின் பழைய
பிரம்படித்தழும்புகள்

மரணத்தின் சாட்சி
மாத முடிவில்
ஊர் விருந்து
சுவரில் தொங்கும்
நினைவுப்படம்

யுத்தத்தின் சாட்சி
உக்கிப்போன எலும்புகள்
மக்கிப்போன உடலணுக்கள்
உயிர்குடித்த உலோகங்களின்
சமதுயில் சாபத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாரது நடுநிசியில் ?

எம்மூர் எருக்கலங்காடுகளில்
ஏதோஓர் மர்ம ஏக்கம்
அசையும் காற்றிலே
அரவமாய் அனுங்கல்கள்
அலையுதோ ஆவிகள் ?

ஆலம் மரத்தடியில்
காதலும் நடக்குது
கதைச்சும் கேட்குது
ஆட்களின் உருவமில்லை
அலையுதோ ஆவிகள் ?

சிரிப்பொலிகள் சிலநேரம்
அழுகைஓலம் சிலநேரம்
அன்றைய பதுங்குகுழியோரம்
அடிக்கடி வருகுது சாமத்தில்
அலையுதோ ஆவிகள் ?

என்வீடு போக வேண்டும்
ஏன் எனைத் தடுக்கிறாய்
மண்ணுடன் சண்டையிடும்
எலும்புக்கூடுகளின் அணி
புதைந்தபடி ஏங்குவது
புத்திக்கு கேட்கலையோ ....?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவியின் ஆசை

பாறையில் பாலூறட்டும்
பாலைவனம் பசுமையாகட்டும்
பசுமுலை அமிர்தம்தரட்டும்
மழைத்துளி தேகம் துளைக்கட்டும்
புயல் பூவிற்கடங்கட்டும்
கனலி திசைமாறட்டும்
நிலவு வெப்பமாகட்டும்
ஆகாயம் துண்டாகட்டும்
பூமி சுற்றாதிருக்கட்டும்
காற்றே கதிர்வீச்சாகட்டும்

நீர் நஞ்சாக மாறட்டும்
கல்லாறு கரைந்து ஓடட்டும்
மரங்கள் பணம் காய்க்கட்டும்
பட்டைகள் பொன்னாகட்டும்
இலைகள் இரும்பாகட்டும்
முட்கள் ரோஜாவாகட்டும்
ரோஜாக்கள் உதடாகட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமுடியில் பூ பூக்கட்டும்
மீசைக்குள் மிருகம் பதுங்கட்டும்
கூந்தல் ஊஞ்சலாகட்டும்
தலைகள் ஈறைந்தாகட்டும்
எச்சில் தேனாகட்டும்
வியர்வை அத்தராகட்டும்
சிறுநீர் பெற்றோலாகட்டும்
இதயம் விலகி இடம்பெயரட்டும்
மரணம் மடியட்டும்
என்றெல்லாம் எனக்கிங்கு
ஆசையில்லை ....

என் கவியுயிர்
இருளுடற்க் குகையை விட்டு
விலகிப் போகுமுன் ..
காணாமல் போன என்
தம்பியை கண்காட்டு
தமிழ்த்தாயே ஒருமுறை ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழியா நிமிடங்கள்

குண்டு மழை நனைக்க
கந்தகக்காற்று தாலாட்ட
சோககீதம் ராகமிசைக்க
இரத்தநதியில் குளித்து
சாவுவாசல் தினம் தொட்டோம்

பானையிலே உணவு
அடுப்பிலே நெருப்பு
அடுக்களையில் கண்டிடலாம்
கூரையில் நெருப்பு
வீட்டுக்குள் பிணங்கள்
போர் மழையில் கண்டோமே

பொத்தி வளர்த்த செல்ல
பூனைக்குட்டி இறந்ததற்கு
கத்தி அழுகிறாள் மகள்
களப்புலத்திலப்பனுயிர்
சொர்க்கம் சென்ற செய்தி
புள்ளையைவந்து சேரலையோ,,,?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தைக்கு போன தாய்
சந்தியிலே சிதைந்து
சல்லடையாய் போனதை
அஞ்சு வயசு பிஞ்சு
எப்படித் தாங்குமையா..!

சுவரில் துளைச்ச குண்டு
மைபூசஅது மறஞ்சிடும்
மனசில் விதைச்ச சோகமும்
மண்ணுள் போன மாணிக்க
மழலைகளின் ஏக்கங்களும்
எதை பூச மறையுமிங்கு ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவனின் மனமும் பேசுது

எனக்குமாசை உண்டு
எனக்குமுணர்வு உண்டு
நானும் வாழ வேண்டும்
எத்தனை கனவாகினும்
ஏதோ ஒரு மண்போர்வை
எனைச்சுற்றி இரும்புவேலி
தமிழ்மாதா நானெங்குது...

சாவதற்கு சலனமில்லை
சரித்திரம் அழிவதில்லை
வலிமை உலோகக்கோட்டை
வழவம்மாறி உருகிறதே
வஞ்சியின் ஆசைத்தூறலால்...

இரும்பணைக்கும் என்கரம்
உனையணைக்க ஆவல்
சூரியன் அன்பொளியால்
உயிர்வாழும் வான்நிலாபோல்
நிலவுன் காதல்தேன் பருக
வாழவேண்டும் மீண்டும் நான் ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரம் மார்புயர்த்துது
வேகம் கரமிறுக்குது
மரணம் கையசைக்குது
காதல் நெஞ்சுருக்குது
மீண்டாலே வசந்தம்
காத்திரு என்னுயிரே
கடமை முடியும்வரை ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைந்த கனவு

வளையல் வாங்கினேன்
வசந்தம் காண்பதற்காய்
வந்தேன் உன்வீடு
வாசல் முன்புறத்தில்
வழவம்மாறிஉன்னுடல்......
வஞ்சித்தான் தேவனன்று
வன்னி தேசத்திலன்று
யுத்த கயிறிட்டு....
உடைந்தது வளையல்கள்
சிதைந்தது உன்கரங்கள்
கரைந்தது எம்வாழ்க்கை
கலைந்த கனவுகளுடன் .....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இப்படியும் இன்று

நாகரீகம் சிகரத்தில் —பெண்
நாணம் பள்ளத்தில்
தமிழ்மானம் பதியுது
பாவாடை கட்டையாகுது

கைபேசிக் காதலால்
காசிழந்தார் காளையர்கள்
காலவோட்டக் காதலால்
கற்பிழந்தார் சில காரிகையர்

ஓடும் வெள்ளியோடையில்
ஓசையில் கரையும்மணற்றுளி
ஓரக்கண் காதற்கச்சல்கள்
ஓடி ஓடி கற்பு பறிப்புக்கள்

பேருந்து காதல்களும்
இறங்கும்போது இறங்கவில்லை
இறங்குது மெத்தைமேல்
உணர்ச்சிகள் வடிந்தபின்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணக்காரக் கன்னியின்
பள்ளிக்காதல் பரதேசியுடன்
பவ்வியமாய் நடக்குது
பறக்கும்வரை வெளிநாட்டுக்கு ...

பழம்பெரும் வரலாறு
இழந்திடா தமிழ்
அன்னை பாதத்தில்
அழியெடுத்த துளிர்கள்
பாதை மாறுவதோ ....?
நெஞ்சங்களே வேண்டாம்
கொஞ்சம் சிந்தியுங்கள் ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாம் ஏமாற்றம்

காசுக்கான கல்வி
தூசான குருபக்தி
வேசமான வாழ்வியல்
நாசமாகும் சமுதாயம்
மோசமான எதிர்காலம்

அன்னமில்லை இல்லத்தில்
சலனமில்லா உள்ளத்தில்
பசிமறைக்கும் பத்தில்
பறந்தது முன்றாவது
பொறியியல் மேதையொன்று
பொருத்தும் பழையவண்டி

தந்தையின் உழைப்பும்
தாயின் கனவும்
தங்கையின் வாழ்வும்
எரியும் நெருப்பில்– அவன்
வாயில் புகை மட்டும்
மூளி மயக்கியும்
மாதுச்சேர்க்கையும்
மகிழ்ச்சிக்க மயங்குவான்
மாயவுலகில் இவன்

நம்பிக்கை ஞானமாய்
விழவின்றி இருட்டில்
வாழ்வை ஒளிகாணும்
பெற்றோர் எண்ணம்
ஏக்க ஏமாற்றமாய் ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏனம்மா சோகம்



தாய் மண்
நினைக்கவே
மரணங்கள்
கரைக்குது
துன்பத்தின்
மறுபக்கத்தை ....

வயற்கரைகளில்
தவழ்ந்த நாட்கள்
கடற்கரை நுரையில்
காற்சட்டையின்றி
புரண்டு நுனிக்கால்
புதைத்து சேர்த்த
ஏரல்கள் எங்கே ...

கிளையிழந்த மரங்களாய்
நிலையிழந்த குடும்பங்கள்
தலையிழந்த உடல்கள்
தூரிகையில் கோடிட்டன
இரத்த மையினால் ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சிலே நெருப்பு
நெருங்காது மரணம்
அச்சம் களைந்திடு
ஆக்குவோம் சரித்திரம்
அகலாத வேதங்கள்

சொட்டும் பனிக்காலை
கொட்டும் வெடிமாலை
பள்ளிப் பதுங்குகுழிகள்
பதறியோடி கதறும்
பாலகனின் ஏக்கம்

கடலும் கறுப்பாகும்
காவியம் எழுத்தாகும்
அலையும் ஆர்ப்பரிக்கும்
ஆவிகலையும் அமைதிக்காய் ..

பூ மரங்கள் விதவையானது
பூசைக்கும் பூவில்லை
சவப்பெட்டிகள் சிரித்தன
சந்திஎல்லாம் தோரணங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீசற்கரும்புகையில்
நீறானதாய்ப்பூமி
பாசக் குழவிகளும்
பஸ்பமாக மண்ணோடு

சுடுகருவி வாசலில்
அணியாகும் ஈக்கள்
படிகருவி தொலைத்த
மழைக்கால மின்மினிகள்

அலை முட்டும்மணல்
பிணம் தட்டும்வயலாக
பாசி படிந்தவாய்க்கால்கள்
பாவம் களையுதுகாவேரியாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுமையோ பதுமையா ......

இலை மறைக்கும் பனி மூட்டம்
கலை உயிர்க்கும் நிலை காட்டும்
தலை வழுக்கை தருவிருட்சமும்
சிலைச்சிற்பமாய் யொலிக்கும்

நீலவான வெண்மேக
நினைவு மீட்டும்
நீட்டுப் பாவாடையும்
கழுத்து அடைத்த
கையடி ஒடுங்கிய
கறுப்புச் சட்டையும்
வெறுப்பில்லா திரை
வேலியாய் தினம்
மானப் பயிருக்கு ....

புழுங்கரிசி சேர்த்து
காய்ச்சி வைத்த
கறுத்தப் பொட்டும்
கலை நளினமான
கன்னத்து மச்சமும்
கழுத்திலே தவழும்
கீச்சுமணி மாலையும்
எண்ணத்தில் இங்கு
எடுபடா நாளுமுண்டோ ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துரோக நிலவு

இராக்கால நிலாவுக்கு
துணையாக விண்மீன்கள்
மின்சார விளக்குகள்
அலங்கரிப்பு ஊர்வலமாய்...
நிலா மினுக்கமடைய
உலாவரும் கதிரவன்
கற்றைகளின் அவசியம்
கருத்தை மறந்தாயோ ..?

அவன் வாழ்க்கை தினம்
அசையாது தண்டவாளமாய்
கிராம வேலிக்குள் உனக்காய்
நீயோ புகையிரதமாகி
அசைந்தாயே மகிழ்வாகி
நின்மதி முடிவின்றி நீ
நவநாகரிக ஓலமிட்டும்
அவன் தாங்கினானே...
அதையும் மறந்தாயோ ..?



மற்றவனின் மனையில்
பிணைமான் வாழ்வு
ஏற்குமா கலை மான்
கொற்றவளே உன்னவன்
நித்தம் பலகோடிதந்த
முத்தங்களும் கனவா ...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு இமையங்கள்
இரு கரத்துள் சரணாம்
சொன்னதாம் பல இரவுகள்
சொர்க்கம் நீயென ..
சொல்லடி பூவே ..
சொகுசு வாழ்வுக்காய்
எல்லாம் மறந்தாயோ ...?

இன்பம் தந்த இன்னமுதன்
சிறை மீண்டு வருமுன்னே
இல்லம் விட்டு நீ விலகல்
இடரான செயலல்லோ ...?
வரலாற்றுத் தவறல்லோ ...?

புகழோடு அவனிருக்க
பூரிப்படைந்த நீ
சிறைவாசம் அவனிருக்க
சிற்றின்பம் தேவை தானா ...?

மிதி வெடியாய் அவன்
மதி வெடிக்கும் –உன்
நினைவுக்கால் குத்தி
இதயவாசல் பிழிந்து
அழுத்தி வருத்தும்
ஆவி கலையும் வரை .....




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணையாத தீபம்

உரப்பை சுவரும்
தேக்கங் கம்பியும்
தந்த வலியகாவல்
தரையக வீட்டில்
மெழுகுதிரி சிரசுகள்
விழிக்கும் விடியும்வரை
தேச ஒளிக்காக உருகி ..

அக்கம்பக்கம் எல்லாம்
மிருகங்கள் குடிமனை
அப்பப்போ பெய்யும்
அமிலமழையும் வேறு ..
இரும்பு துருக்கற்றும்
எமை அணைக்கலாம்
சொல் என் தோழி
உன் கனவு எது ..?
கேட்டது ஒரு நெருப்பு ..





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொட்டும் சங்கீதத்தில்
தட்டும் தாளத்துக்கு
மெட்டுப் போடும்
சலங்கைக் காலொன்று
சரிந்ததால் நான்
ஒற்றைக் காலில்.
அன்னைதேசம்
ஒளி காண நான்
ஆவியை உருக்குவேன்
ஆசை இது தான்
பலகாலம் வாழ்ந்திங்கு
பயனேதுமுண்டோ
பார் என் தோழி
சிலகாலம் வாழ்ந்தாலும்
சீர் தூக்கி புகழ் சூடி
உயிர் வாழும் வரலாற்றில்
பதிவேனே நிலையாகி
சொன்னாள் தீவிழி
பொன்நிற புன்னகையுடன் .....

மருதாணி முத்தமிட்ட
மங்கையின் மடலில்
எழுத்தாணி தவழ்ந்த
விரல்நுனித் திடலில்
உரிமையோடு ஓர்
உயிருண்ணும் இரும்பு
ஒட்டிக்கொண்டது ஏன்
நிரந்தரமாய் ... ..?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணவேளை மனநிலை

என்னுயிர் கரைந்து
சில மணித்துளியில்
உறைந்த உப்புக்காற்றில்
உலாவிக் குலாவும்

என்னுடல் வான்பார்த்து
மண் மேட்டில் படிந்து
மான வலிமையோடு
வடிவம் பதிக்கும்
வரலாற்று கோவில்களில் ....

அடுப்பு புகையால்
அவியும் அம்மாவின்
அன்பு விழிகளையும்
அருமைத் தங்கையின்
திருமணக் காட்சியையும்
ஆவியாய் காண்பேனோ ..?
மனதில் நினைக்கிறேன் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆருயிர்த் தோழியே
பேரருள் வள்ளல்
ஒட்டுசுட்டான் சிவன்
தேரோட்டத்திலன்று
வெள்ளோட்டமானவுன்
குறும்புப் புன்னகையை
மனதில் நினைக்கிறேன்

மாமா என்றழைக்கும்
மழலை மலரவனின்
மங்காத மந்திரங்கள்
என்னுயிரில் அகலாது
அவனையும் இப்போது
மனதில் நினைக்கிறேன்...

பள்ளிக் காலத்தில்
கள்ளக் கோழி
பிடிச்சு சமைச்ச
மாலை நேரமும்
,மரவள்ளித் தோட்டமும்
மனதில் நினைக்கிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைத்தெரு அரட்டையும்
கழக விளையாட்டுகளும்
வாய்க்கால் குளிப்பும்
வயல் பலகையடிப்பும்
வம்புச் சண்டைகளும்
மனதில் நினைக்கிறேன் ....

எம்தேச இளம்மொட்டுக்களே
நீங்கள் மலரும் நேரம்
நான் மரணத்துயிலில்
ஆனாலும் கேளுங்கள்
தமிழ் விருட்சங்களை
இயம்பும் என் புகழை....

ஓ ஆலமரங்களே
நானாடிய நினைவுகளை
மறக்காமல் சொல்லுங்கள்
எதிர்கால புற்களுக்கும் ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதிர் கன்னியின் ஏக்கம்



நீரில் தோன்றும்
கனவு விம்பமோ .....?
கலையும் நேரம்
காட்சி மாயமோ .......?
பேய்களாடும்
சூனிய தேகமோ .........?
புரண்டு மாறும்
பிரபஞ்ச விதியோ .....?
வாழ்க்கை என்பது
வலிகளின் கூடோ......?

மணப்பந்தல் வீடும்
முள்முருக்கு முன்றலும்
கூறைச் சாறியும்
குங்குமப் பொட்டும்
மாங்கல்யக் கயிறும்
மதியில் தெரியுது
விழயும் வரை ............
கிடுகுச் செத்தையும்
கிழிஞ்ச போர்வையும்
பழைய புற்பாயும்
கனவைக் கலைக்குது
கண் விழிக்கும் கணம்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேக பூமியில்
மோக மழை தூவுமுன்
மேக இருள் சூழ்ந்து
போகப்பயிர் மடிந்திடுமோ
அச்சம் வாட்டுது
அணங்கிவள் இதயத்தை ...
தரிசுநிலத் தேகம்
கருகுது பருவ வெப்பத்தால்
காளையவன் கரங்களின்றி....

பூத்து விட்டாள் என்றாலும்
காய்க்க வழி பிறக்கவில்லை
முகத்திட்டுக்களில் போட்டியிட்டு
முன்னேறும் தோற்சுருக்கு
காயப்பட்ட காதோரம்
காலம் மாறுமென்றது

வகுப்புத் தோழிமகள்
வந்திட்டாள் வயசுக்கு
வரும்வாரம் நீராட்டாம்
கட்டுக் கரும்பென்றால்
நாடும் எறும்பணிகள்
மூத்தோர் சொன்னாரன்று......
கற்புக் கரும்பைப்பார்த்து
பட்ட கரும்பென்றார்
வந்த வரன்களின்று.......

தேனீர் கோப்பைகளில்
பதிந்த உதடுகள்
அத்தனையும் சொன்னது
பிடித்திருக்கிறது என்று
அவளையல்ல தேனீரை......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் வழிகாட்டி

சாதனை ஆண்விருட்சம்
சாயாமல் நிமிர்ந்தெழ
ஆணிவேர்ப் பலமே
பெண்களின் வழிகாட்டல் ....

காலம் எதிர்ப்பாக
கல்வி இருட்டாக
கலங்கி நானிற்க
ஒளிதந்த தீபமே
வழி சொன்ன
பெண் ஞானியே .....

பிரதீபா எனும்நாமம்
அடியேனுக்கு தீபஒளி
விரிவுரையாளராய்
விஞ்ஞான சிகரமாய்
விளங்கும் யாழின்
இளம் புதுமையே .....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னால் முடியும்
பயப்பட வேண்டாம்
துன்பத்தை எண்ணி
துவண்டு விடாதே
செந்தூர் நீ எப்போதும்
சாதிக்க பிறந்தவன் ,
எதிர்ப்பவைகள் யாவும்
பிரச்சினைகளல்ல ...
சவால்கள் அவை .
சவால்கள் உந்தன்
சாதனையின் திறவுகோல் ..
நீங்கள் உதிர்த்திய
வார்த்தை முத்துக்கள்
மாத்திரையாயல்ல
மந்திரமாய் இன்றும்
மனதில் ஒலிக்குது ....

கருங்கல்லாயிருந்த எனை
கல்வி உளியாலும்
நல்ல மதியாலும்
செதுக்கி சிறந்த
விஞ்ஞான சிலையாக்கி
பல்கலைக்கழகம் வரை
உயர்த்திய ஏணி
நீங்கள்தான் தீபாக்கா .....
சாகும்வரை நான்
சரிந்திடாது உம்புகழை
பரணியாய் பாடிடுவேன்
தரணியெல்லாம் போற்றும்படி ......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடலி சொன்ன வாக்கு

பச்சை வயலோரம்
பசும் பனங்காடு
பற்பல காலமாய்
அப்பனை மரத்திலே
பச்சைக் கிளிகளின்
சொர்க்க வாழ்வு

பாருக்கு கொதிப்பு
வேடர்க்கு வெறுப்பு
வீசினார் நெருப்பை
கற்றைக் கீற்றுக்களாய்
தலையிழந்த தருவும்
நிலையிழந்த கிளிகளும்
தவித்தது மறுவாழ்வுக்காய்....

சில கிளிகள் இறந்தன
சில கிளிகள் பறந்தன
சில கிளிகள் தொலைந்தன
சில கிளிகள் சிறகறுத்தன
சில கிளிகள் உடலெரித்தன

பழம்முன்னோருக்காய்
உளமுருகியது இளங்கிளி
வடலி வட்டிலமர்ந்து.....
விருட்சங்கள் சாய்ந்தாலும்
விதைகள் அழியவில்லை
நானும் வளர்வேன்
உனக்குமிடம் தருவேன்
கட்டியம் சொன்னது
கருக்கு வாள்வடலியும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருசில
# நிலவுகளுக்கு மட்டும் ...

கட்டழகை கொட்டிக்காட்டி
காளையரை தட்டி இழுக்கும்
வட்டமிடும் மானாய் —தினம்
பட்டமிடும் நவீனநிலவுகளே ...

எப்பொருள் மறைவோ
அப்பொருள் அழகும்
அசையா வலுவாய்
எப்போதும் உயர்வே

உன்னுயிர் வாசல் தொட
ஒரு சாவிக்கே அனுமதி
உன் வாழ் நாளினிலே
அச்சாவி தொலைந்தாலோ
அச்சாவி அழிந்தாலோ
அடைத்துவிடு உடன்
கதவுகளை நிரந்தரமாய்
மானத்திரையிட்டு ...
மறக்காது மனிதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொத்துக்களைத் தாமிழந்து
முத்துக்களைத் தாரைவார்த்த
அத்தனை உணர்வுகளும்
மொத்தமாய் விரட்டும்
பாவப் பேய்களுக்கு
பந்தம் பிடித்து பல்லிளிக்கும்
பாதக நடிகைகளை

காலங்கள் கரையலாம்
காதலும் மறையலாம்
போகம் தந்த ஞானம்
சோகம் தந்த நெருடல்
வேகம் கொண்ட வாழ்வில்
வேதனையைத் தூண்டும்
ஆத்மம் அடங்கும் போது .......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்ததோ மனிதம் ..?

பொன்னிலப் பெருமையாய்
வன்னியின் பெரும் தேசம்
வணங்காத மண் வாசம்
வாழும் என்றும் தமிழ் பாசம்

நீண்ட இடைவெளிக்குப் பின்
ஒரு விடுமுறையில்
என்நிழல் என்காலில்
மிதிபடும் வேளையில்
பேருந்திலிருந்து இறங்கி
நடக்கிறேன் வீதியோரம்

அகோரமாய்த் தன்
முகம் காட்டி வெய்யோன்
கோபத்துடன் சிந்தினான்
வெப்பத்துளிகளை எனை நோக்கி
அவனுக்கு என்னில் கோபமோ ...?
அல்லது
என் மண்ணில் கோபமோ ..?
அல்லது
அவலம் சுமந்த தேசத்தில்
அழுகின்ற உயிர் விதைகள்
முளைக்க வெப்பம்
போதவில்லை என
அவனிடம் மனுக்கொடுத்ததோ ..?
சிந்தையுடன் என்கால்கள் அசையுது
மண் வாசத்தை முகர்ந்தபடி ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெருவுக்கு தெருவோரம்
அழகிய பெயர்ப்பலகைகள்
ஆனாலும் அதிலும்
என் மொழிக்கு
இரண்டாம் இடம் தானே

கன்னியவள் கருங்கூந்தலில்
வெண் கோடு போட்டதாரோ
விதியின் நடுவே பதிந்த
வெள்ளிக் கட்டைகளும்
மனதில் நினைக்குமோ
மனிதவுயிர் மகிமைகளை
வாடகைக் கொள்வனவு
வாகனங்களின் அணிவகுப்பு
இரைச்சல் ஒலிகள்தான்
நகரத்தை ஆழுதோ...
இயற்கையும் மாழுமோ..?

தெருவோர பாலைமரச்
சாரலில் மகிழ்வாய்
அழகிய இளமங்கை
என்னைப் பார்த்தாள்
மெல்லச் சிரித்தாள்
செல்லமாய் சிணுங்கினாள்
கண்ணசைத்து ஏதேதோ
கதைகள் சொல்கிறாள்
மோட்டார் வண்டியிலிருந்தபடி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுள் ஆனந்த மின்னல் கொதிப்பு
ஆவலாய் அருகே நெருங்கினேன்
தலையாட்டியது மெழுகுபொம்மை
தலைக்கவசத்தை கழற்றினாள்
தன் கைபேசியை
காதுடன் அணைத்தபடி
அப்போது உணர்ந்தேன்
அத்தனையும் எனக்கில்லை என்று

ஆனாலும்
ஓங்கி ஒரு அடி கொடுக்க வேண்டும் போல்
தாறுமாறாகத் திட்டித் தீர்க்க வேண்டும்
போல்
ஆதங்கமொன்று என்னுள்
ஏன் தெரியுமா
அத்தமிழ் அணங்கு
கை பேசியில் உரையாடி
வாயுதிர்த்திய
வார்த்தை திரளைகள்
என் உறவுகளின்
உயிர் பறித்தவன் மொழிக்கு
சொந்தமானவையே ......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவி மனைவிக்காய் ஆவி எழுதும் ஓர் மடல் ....

ஆசையாய் ஓர் மடல்
அருமைத் துணைவிக்காய்
அன்பகலாப் பிரியங்களுடன்
அழகுக்கொடியின் வதனத்தை
அணைக்கிறேன் நினைவுகளால்

என்றாவது வருவேனென
எண்ணிவாழும் என்னவளே
உன்பாசத் திவலைகள்
கண்ணலையில் தெறிக்குதடி
மண் மூடி உன்னவனுடல்
விண் நோக்கி அவனாவி
வழிபார்த்து வாடாதே
வரமாட்டேன் மீண்டும் நான்

ஒவ்வொரு வியாழனும்
விரதங்கள் பிடிக்கிறாயோ
உன்னவன் உயிருக்கென
உன்னையே வருத்துறாயோ–கண்ணே
வழிபார்த்து வாடாதே
வரமாட்டேன் மீண்டும் நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணால் படம் வரைந்து அன்று
காதல் கோலமிட்டேன் நான்
படிகருவி தொலைத்து இன்று
மழைக்கால மின்மினியாய் நீயும் —கண்ணே
வழிபார்த்து வாடாதே
வரமாட்டேன் மீண்டும் நான்

கனவி துயிலும் போது
தனிமை வாட்டுமுன்னை
தவிப்புக்களைத் தின்று
தனிமையை அணைத்து
என் வாழ்வு நினைவுகளுடன்
நகருதோ உன் நாட்கள் —கண்ணே
வழிபார்த்து வாடாதே
வரமாட்டேன் மீண்டும் நான்

ஐ.நா நிறுவனங்களின்
முறைப்பாட்டுக் கூடைகள்
நிறையுதாம் உன் கைவரைந்த
காகித ஓலைகளால்
கணவரைக் காணவில்லை
கண்டுபிடித்து தாருங்கள் என்று —கண்ணே
வழிபார்த்து வாடாதே
வரமாட்டேன் மீண்டும் நான்

எலும்புக் கூட்டுக்கு
எழுந்து நடக்கும் வலுவிருந்தால்
நிச்சயம் வந்து
உண்மையை உரைப்பேன்
மரண பூமியில் நான்
மண்ணோடு போனகதை —கண்ணே
வழிபார்த்து வாடாதே
வரமாட்டேன் மீண்டும் நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர் கூடு ஒரு கனவுக் கூடு

உயிர்க் கூடு நிலையென்று
உளம் பொங்கி
மொழி கூற
உறுதி மொழி இங்கில்லை

சில காலம் வாழ்ந்தாலும்
சீர் கொண்டு வாழ்க
பல நூறு மாந்தரின்
உளம் வென்று சாக

உயிர் தந்த உறவும்
உயிர் காக்கும் உணவும்
உனக்காய் வாழ்பவளும்
உத்தமமே என்றும்

வரனாகிப் புகுந்த பின்
வந்தாளின் வதனத்தில்
வசந்தத்தை தூண்டு
வரதட்சணை வருமி நீ
வஞ்சித்தாயென்றால்
வனக்காட்டுப் புழுவாகி
வருந்துவாய் மாண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவனி ஆடவனே ...

.துயமுழு நிலவென
குளிர்கின்ற பகலென
வீசு மாருதப் புகழ்என
தேன்சுரங்கத் தமிழென
கன்னிப்பெரு மகளென
அன்புவிளை வயலென
ஆசைக்களித் தருவென
குறையறு குருவென
மறைசொல் பொருளென
மங்காநல் லொழியென
மானத்தின் விதையென
மகிழ்ச்சிக் கதையென
பொறுமைக் கருவென
பெண்மைசீர் கடலென
பொங்குகவித் திடலென
பேறுதரும் பயனென
உதிரம் தந்த உறவென
இதழ்த்தேன் மலரென
சினத்திற்கு மருந்தென
மோகம் தீர் விருந்தென
அழகபினைய சிலையென
கவிமனக் கலையென
கணக்கிடமுடியா விலையென
கண்ணுறு ஆடவனே
காரிகைக் கொடிகளை
களிக்கும்காலம்
சுவைக்கும் வாழ்வு ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தண கடத்தல் வீரப்பன்

கானக வேந்தன்
காலனின் காலன்
காரிருள் துடைத்த
காவியத் தமிழன்

பச்சை உடையுனக்கு
உச்ச அழகுதான்
கட்டு மீசையும்
மிரட்டும் காடையரை

மரணங்கள் அஞ்சும்
உனைக்காண
மறவர்கள் படையோ
உனக்காக

அவனைக் கொன்றதாய்
அரக்கத்தின் அறிக்கைகள்
அறைகூவி நிற்கிறது
அர்த்தமற்ற சான்றுகள்
ஆண்டவனை கொன்றிடாது
அவன் தேசம் சொல்கிறது
எது எப்படியாயினும்
தமிழர்களை ஆண்டவன் தான்
காக்க வேண்டும் மீண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் அழியா நினைவுகளுடன் ...

முள்ளிவாய்க்கால் மண்ணில்
துள்ளி பதிக்கிறேன் பாதம்
கொள்ளி வைத்த நிமிடங்களை
எண்ணி மனதில் கொண்டுமீண்டும்

ஒவ்வொரு மணல்துகளும்
ஒவ்வொரு செங்குறியீடாய்
தெரிவது போல் பிரம்மை
இது விளைநிலமோ ..?
பிணப் புதைநிலமோ ..?

பதுங்குகுழி இருந்தஇடத்தில்
முதிரமரக்கதவு
கதிரை கட்டில்
இப்பவும் இருக்குது
இரத்த சாயம் பூசியபடி ....

பக்கத்து வீட்டு
பரமண்ணை
செத்த இடத்தில அவரைக்
காணவில்லை
கடைசியாய் கட்டியிருந்த
பச்சைக்கோடுபோட்ட
சாரத்துண்டு
எட்டிப்பார்க்குது
மண்ணுக்குள் இருந்து ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனையிருந்த இடத்தினிலே
மண்மேடு தெரியுதங்கே
பசுஞ் சோலைகளும்
பாலைவனம் ஆனதிங்கே

கருகிப்போன ஒரு
கற்பகதருவுக்கு கீழே
கறிச்சட்டியுடன்
காறை என்பு ஒன்று
கவலையாய் கிடக்குது

மரண ஓல அலறல்கள்
மறுபடியும் கேட்பது போல்
மதியில் சலனம்
பொங்கி எழும்
கடலலை இரைச்சல்
காதில் உணரும் போது

அண்ணாந்து வானைப்
பார்க்கிறேன்
காக்கைக் கூட்டங்கள்
குதூகலமாய் மிதக்குது
சுத்திச்சுத்தி உயிர்குடித்த
அத்தனை இரும்புகளும்
மொத்தமாக வருவது போல்
சட்டென எண்ணம் தோன்ற
விழுந்து படுக்க தயாரானேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்ப் பானையிலே
இரத்தப் பாலில் எம்
தசைத்துண்டங்களையிட்டு
அவித்துக் கொண்டிருந்த
அநியாய பேய்களையும்
அழிந்த நம் தேச சொத்துக்களையும்
மறக்க முடியுமா ..?

சற்று சிந்திக்கிறேன்
சோக மேகக்கூட்டங்கள் எனை
சிறைப்பிடிக்க
என் மன மனையை
முற்றுகையிடுகிறது ...
தப்பித்து கொள்ள
தினம் முயன்று
புன்னகை ஆயுதத்தை
பிரயோகிக்கிறேன் பெருமூச்சுடன் ......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளங்கைத் தத்துவம்

உள்ளங்கை துருவத்தில்
ஊன்றி நிற்கும் ஐவிரல்கள்
உணர்த்தும் பல
உண்மைக் கருத்துக்கள்

எல்லா விரல்களும்
வெவ்வேறு திசையிலே
வெவ்வேறு பருமனிலே
தனிப்பட்டு நிற்கிறதின்று

உள்ளங்கையில்
தமிழ்த் தாயின் மானம்
கேள்விக் குறியாகி
தலை விரித்து அழுகிறது

வீசும் பகையின்
விசக் காற்றிலே
வரலாற்று ரேகைகள்
வஞ்சனையாய் கரைகிறது

வேற்றுமைகள் மறந்து
ஒற்றுமையாய் ஒன்றாகி
ஒரு புள்ளி நோக்கி
அனைத்தும் ஒருமித்தால்
தமிழ்த்தாயின் பாதுகாப்பு
தானாக வந்து சேரும்
கையிற்கோர் பலமும்
கட்டாயம் வந்து விடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறப்பானா வாழ்வில் ?

நெல் கொத்தவரும்
புற்குருவி விழியோடு
மௌனம் பேசிய
ஆத்ம நினைவுகள்
மறப்பானா வாழ்வில் ?

காவலில் கண்யர்ந்து
பழந்தழப் பறணில்
நுளம்பு கடிக்க
உறுண்டு விழுந்தது
மறப்பானா வாழ்வில் ?

பத்து வயதில்
அப்பனுயிர் எடுத்த
இறை கோயில்
சுத்தி என்னபயன்
புத்தி எண்ணியதை
மறப்பானா வாழ்வில்?

வித்தியாலயம் விழிக்கும்
தேவாலயம் சிலையூரில்
வில் வளைந்தும்
நல் சொல்வளையா
பூசாரி கந்தையா
மறப்பானா வாழ்வில் ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண் பானையில்
மிதக்கும் பேரீச்சை
தேன் தூறல்தரும்
அவர் அன்புடன்
மறப்பானா வாழ்வில் ?

சலனம் மறந்து
நனையாது இரவில்
துயின்ற நாகம்மாள்
தலைவாசல் மண்டபம்
மறப்பானா வாழ்வில் ?

மாணவ முதல்வனாய்–இந்து
மாமன்ற தலைவனாய்
விஞ்ஞானத் துறையில்
விழுதாக்கிய கிளிநொச்சி
மத்திய கல்லூரியை
மறப்பானா வாழ்வில் ?

கானக வீடுகளும்
கறுப்புகளின் எழுச்சிகளும்
காந்தல் பார்வைகளும்
கதறல் ஓலங்களும்
மறப்பானா வாழ்வில் ...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரிழந்து உறவிழந்து
உணவின்றி மூன்றுநாள்
உயிர் பிழைத்து அகதியாய்
உடல் தசை துண்டம் மேல்
ஊன்றி நடந்த பாதங்கள்
மறப்பானா வாழ்வில் ?

கம்பி வேலிக்குள்
கரிக்குருவிகளின் வீடு
கலிகாலம் விலக
காரிருள் மறைய
கம்பிகள் திறந்தன
பறந்தன சில குருவிகள்
மறப்பானா வாழ்வில் ?

பற்பல கனவுகளுடன்
பழைய படி மாணவனாய்
பல்கலை கழக வாசல்
படியேறிய அந்த
பத்தாம் மாதம் மூன்றாம் நாள்
மறப்பானா வாழ்வில் ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வாழும் ஒரு கிராமம்

கலை விதைத் தூரிகையில்
கவியொன்று வரைகிறேன்
கானக கிராமத்திலே
கண் கண்டதை துளிர்க்கிறேன்

ஆலமடச் சாரலும்
விழுதுக் கயிறுகளும்
அவ்வூர் மழலைகளின்
உல்லாசப் பூங்கா

குப்பி விளக்குகளும்
அடுப்பு நெருப்பும்
கிராம ஏழைக்குடிலின்
இரவு நேரச் சூரியன்கள்

பச்சை பாசிபடிந்த
பழைய வாய்க்கால்கள்
புகழ் காத்தவர் நீராடிய
புனித நீர்த்தடாகம்

பகலில் நட்சத்திரம்
காட்டும் வானமாய்
மழைத்துளி துளைக்கும்
ஓலைத் தேகமாய்
கிடுகுக் கொட்டில்கள்
அப்பள்ளி அரண்மனைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இலையாடைகள்
இழந்து கருகிய
நிர்வாண மரங்கள்
இரத்த சாட்சியமாய்

சாதனை ஒன்று தான்
எச்சமாய் எனும்
நம்பிக்கை ஒன்றுதான்
மிச்சமாய் அவர் வாழ்வில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருத்தியின் பதறல்...



மரணம் தின்ற
மரணியா நிமிடங்கள்
மறையாத கறையாகி
மனதை அரிக்கும் துயர்

துள்ளி திரிந்த குழவிகள்
துருத்துருவாய் ஆன கதை
பள்ளிக் கட்டடங்கள்
மனித இறைச்சிக்கடைகள்

சேலைப்பை மண்மூட்டைகளும்
கூரைமரக் கட்டுக்களும்
மண்மூடிக் கவசத்துடன்
அக்கால வசந்த மாளிகையாய்

மோட்டார் சைக்கிள் விற்று
மூன்று கிலோ அரிசி வாங்கினோம்
மாத்து மோதிரத்தை விற்று
தேங்காய் ஒன்றும் வாங்கினோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்கரையில மலம்
கழிச்சு முடிச்ச பின்
சுழகை மறக்காமல்
திருப்பிக் கொண்டு வாரும்

காசுப் பெட்டி மேல்
குண்டு விழுந்திட்டாம்
நாசமாய் அதுவும்
மோசமாய் எரியுதாம்

இரண்டு காலெலும்பும்
இரண்டாய் போச்சுதாம்
பணம் அள்ளப்போன
பக்கத்து வீட்டு அருமைக்கு...

நாளை மலர்வதற்கு
நாலு மணி நேரம் இருக்கு
யாருயிர் போகுமோ
அதிகாலை புலருமுன்..?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னவளே .......

ஆதிமுதல் அந்தம் வரை
அழகுநிறை அணங்கே
சோதியாய் உணர்வெழுப்பும்
சொர்க்க மலர்த்தேனே

அந்தி அரும்பும் வேளை
அன்னமுன் விழிவேலை
எந்தன் மீது எறிவாய்
எழில் சிந்தும் மானே

பள்ளியில் படிக்கும் போதே
பக்கப்பார்வை வீசுவேன்
பாவையுன் நினைவில் மூழ்கி
பாரிலென் நினைவை மறப்பேன்

உன்னவன் நானென
உலகமே சொல்லவேண்டும்
மன்னவன் மகுடமெல்லாம்
மணியாகி மின்னவேண்டும்
எண்ணிடும் பொழுதெல்லாம்
என் நாவை நீ தழுவவேண்டும்
கண்ணிமைக்கும் துளிநொடியும்
கருத்தினிலே முத்தமிட்டு
கண்நெகிழ்ந்து உருகவேண்டும்

உன்னழகும் உயருது என் வயதுயர
உள்மனம் சொல்லும் உண்மை தானது
உனையறியார் யாருள்ளார் என்கவியே
உரைத்திடுவேன் இறக்கும் வரை
உயிர்த் தமிழ் கதிர்கொண்டு .......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியரைப் பற்றி...

"நிலவைத் தேடும் வானம்" எனும் கவிதைத் தொகுதியினூடாக அறிமுகமாகிய எம் இலக்கிய உறவின் நெருக்கம் இன்றைக்கு வியாபகமாகியுள்ளதென்றால் கவியின் புதுமை , சிருஷ்டிப்புத் தான் காரணம். கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் சுந்தரமூர்த்தி செந்தூரன் கலைக்கு கொடுக்கும் முக்கியத்துவம் அளவிடமுடியாதது. இவர் விஞ்ஞானத் துறைசார்ந்தவராக இருந்தாலும் தனது கவிதைகள் மூலமாக மனித விழுமியங்களைப் படம் போடும் தன்மை பாராட்டுதற்குரியது. இவர் கடந்த வருடம் "காவியப் பிரதீபா" எனும் விருதினை வென்ற கவி வெற்றியாளன். வன்னியூர் செந்தூரனின் அடுத்த படைப்புத்தான் "உயிர் வலித்த கணம்". அற்புதமான ஆழவரிகள் உள்ளத்து உணர்வுகளை அகழ்ந்தெடுத்து நிற்கிறது. ஈழத்து இலக்கியத் தளத்திற்கு முல்லைமண் தந்த கவி நட்சத்திரமே வன்னியூர் செந்தூரன்.

வாழ்க கவியாளன், மிளிர்க அவன் கவிப்புதையல்கள்.

திருமதி.கௌரிபுத்திரி கிருபாகரன்
தமிழ்பாட உதவிக்கல்விப் பணிப்பாளர்
துணுக்காய் கல்வி வலயம்
முல்லைத்தீவு.



ISBN 978-955-41197-0-3
9789554119703

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org